பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 07 வியாழக்கிழமை 20.01.2022 கதிர் 303

## நான்கு விபத்துக்களில் நால்வர் பரிதாபச் சாவு!

நாட்டில் நான்கு பிரதேசங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டிவீதி, வராகுமர பிரதேசத்தில், வானொன்று பாதசாரி

2

# கோட்டாவால் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லும் இளைஞர்கள்

### சபையில் சஜித் சாடல்



இலங்கையிலுள்ள இளைஞர்களை கோட்டாபய அரசு வெளிநாட்டுக்குத் துரத்தியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் இன்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டிலுள்ள பிரச்சினைகள் இப்போது தீரவில்லை. ஆனால், பயங்கரவாதம், தேசிய பாதுகாப்பு என்று கூறி இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்.

2



### தீர்க்கமான முடிவை எடுக்க

## மகாநாயக்க தேரர்களை விரைவில் சந்திக்கின்றது சுதந்திரக் கட்சி

கடுமையான அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசியும், ஆலோசனையும் பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் விரைவில் கண்டி சென்று, மகாநாயக்க தேரர்களைச் சந்திப்பார்கள் எனக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி

2

## ரஞ்சனுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுங்கள்

### கோட்டாவிடம் சஜித் மீண்டும் கோரிக்கை



சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியைத் தொலைபேசி

2

## தமிழக மீனவர்களின் படகு கடற்படையால் மூழ்கடிப்பு!

### அத்துமீறலைக் கண்டித்து காரைநகரில் நாளை போராட்டம்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்படையின், வேகப் படகு மோதியதில், தமது படகொன்று கடலில் மூழ்கியுள்ளது எனவும், படகில் இருந்த 7 மீனவர்களும் கடலில் மூழ்கிய நிலையில் சக மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றியுள்ளனர் எனவும் தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழக மீனவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 500 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில்

2

## அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு கொரோனாத் தொற்று உறுதி



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அமைச்சர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருடன் தொடர்பில் இருந்தவர்கள், தம்மைத் தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக சரத் வீரசேகர முக்கியமான சில நிகழ்வுகளில் பங்குபற்றியிருந்தார்.

2

## வவுனியாவில் தனியார் மதுபான விடுதி இன்று அதிகாலை தீயில் எரிந்து நாசம்!

(வவுனியா நிருபர்)



வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் மது விருந்தகம் இன்று அதிகாலை திடீரென தீப்பற்றி எரிந்த நிலையில் 4 மணிநேர போராட்டத்தின் பின்னர் தீயணைப்புப் பிரிவினர் கடும் முயற்சி செய்து தீயைக் கட்டுப்படுத்தினர்.

குறித்த தீ விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள மதுபான விடுதி ஒன்றில் அதிகாலை 3 மணியளவில் தீப்பிழம்புடன் சத்தம்

2

## தீ மிதிப்பில் பங்கேற்ற இளம் தாய் உயிரிழப்பு

கொழும்பு, ஆமர் வீதியிலுள்ள ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற வருடாந்த தீ மிதிப்பு உற்வசத்தில் கலந்து இளம் தாய் ஒருவர், தீயால் ஏற்பட்ட காயங்களால் உயிரிழந்தார்.

கொல்வத்தை பகுதியைச் சேர்ந்த 26 வயதான அக்குருவிட்ட ஆராச்சிகே இரோ மதுரங்கனி என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

ஆமர் வீதியிலுள்ள குறித்த ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பு நிகழ்வு கடந்த 14ஆம் திகதி இரவு

2

### கட்டுவனில் மக்களின் நிலத்தில் அடாத்தாக

## இராணுவம் அமைக்கும் வீதியை நேரில் பார்வையிட்ட கஜேந்திரன்

(ந.லோகதயாளன்)

கட்டுவன் பகுதியில் மக்களின் காணி ஊடாகப் படையினர் அடாத்தாக அமைக்கும் நிலங்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் நேரடியாகப் பார்வையிட்டார்.

இதன்போது ஊடகங்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

2

## வவுனியாவில் தனியார் மதுபான விடுதி ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கேட்டதை அவதானித்த அயலவர்கள் வெளியில் சென்று பார்வையிட்ட சமயத்தில் குறித்த மதுபானசாலையில் தீப்பற்றி எரிந்ததை அவதானித்தனர் .

இதையடுத்து உடனடியாகச் செயற்பட்ட அயலவர்கள் வவுனியா நகர சபை தீயணைப்புப் பிரிவினருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தபோதும் கட்டடம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மதுபானசாலை கட்டடத்தினுள் இருந்து வெடிச்சத்தங்கள் கேட்டமையால் தீயை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன், அப்பகுதியில் பதற்றநிலையும் ஏற்பட்டிருந்தது.

இந்தத் தீ விபத்துச் சம்பவத்தால் குறித்த மதுபானசாலையின் கட்டடம் முழுமையாக சேதமடைந்திருந்ததுடன் பல இலட்சம் பெறுமதியான பொருள்கள், மதுபானப் போத்தல்கள் என்பன தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தடவியல் பொலிஸாருடன் இணைந்து வவுனியா பொலிஸார் மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, விரைந்து செயற்பட்ட இலங்கை மின்சார சபையினர் குறித்த பகுதிக்கான மின்சாரத்தைத் துண்டித்தமையால் பெரும் அனர்த்தம் தடுக்கப்பட்டதுடன், பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (100)

## அமைச்சர் சரத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலும் அவர் பங்கேற்றிருந்தார்.

## தீ மிதிப்பில் பங்கேற்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றது.

குறித்த பெண் தீமிதிப்பு நிகழ்வில் கலந்துகொண்டபோது கால்களில் தீக் காயங்கள் ஏற்பட்டன.

தீக்காயங்களுக்கு சிகிச்சை பெறாமல் வீட்டில் இருந்த பெண், கவலைக்கிடமான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தொடர் சிகிச்சை பெற்று வந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## இராணுவம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டுவன் மயிலிட்டி வீதியின் மேற்குப் பகுதி விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இன்று 4 ஆண்டுகள் கடந்தும் இந்த வீதியில் 400 மீற்றர் தூரத்தில் வீதியையும் அதனோடு இணைந்த மக்களின் நிலங்கள் 26 மீற்றரும் இன்றுவரை படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனை விடுவிக்குமாறு நில உரிமையாளர்களும் மக்களும் கோரிய நிலையில் தற்போது மக்களின் நிலத்தின் ஊடாக புதிய வீதி படையினரால் அடாத்தாக அமைக்கப்படுகின்றது.

இதன் மூலம் மக்களின் நிலம் பறிபோவது மட்டுமல்ல இதற்குப் பின்பும் இந்த வீதியை பாதுகாப்பதற்காகவும் பறிகொடுக்கும் அவலமே காணப்படுகின்றது. இவ்வாறுதான் தமிழர் பகுதி அபிவிருத்தி என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்படுகின்றது.

இந்த ஆக்கிரமிப்பையும் நியாயப்படுத்தி தமது சாதனையால் வீதி அமைக்கப்பட்டது எனக் கூறுபவர்களும் இருக்கின்றனர்.

இதனால் இந்த வீதியைத் திறக்க முன்பு அதன் உரிமையாளர்கள் வழக்குத் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளனர். நாமும் எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். - என்றார்.

## மகாநாயக்க ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையிலான அரச கூட்டணியில் அங்கம் வகித்தாலும், அரசின் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடுமையாக விமர்சித்து வருகின்றது. இதனால் மொட்டு கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் இடையில் கடும் சொற்போர் மூண்டுள்ளது.

அரசுக்குள் இருந்துகொண்டு, சலுகைகளை அனுபவித்தபடி விமர்சிப்பதைவிட, கௌரவமாக வெளியேறுங்கள் எனச் சுதந்திரக் கட்சியினருக்கு மொட்டு கட்சி உறுப்பினர்கள் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், புதியதொரு கூட்டணியைக் கட்டியெழுப்புவதில் சுதந்திரக் கட்சியினர் தீவிரம் காட்டி வருகின்றனர். அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் சுதந்திரக் கட்சிக்குள்ளும் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து, ஆலோசனை பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் விரைவில் முடிவொன்றை எடுக்கவுள்ளார். அதற்காகவே அமைச்சரவை மறுசீரமைப்பைக்கூட அவர் பிற்போட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

## தமிழக மீனவர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று புறப்பட்ட மீனவர்கள், கச்சதீவுக்கு அருகில் மீன்பிடித்துக்கொண்டு இருந்த வேளை, இலங்கைக் கடற்படையினர் தமது வேகப்படகில் வந்து மீனவர்களைத் துரத்தினர்.

அதன்போது , தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்த வஸ்தியான் என்பவருக்குச் சொந்தமான படகுடன் கடற்படையினரின் படகு மோதியது. அதில் படகு கடலில் மூழ்கியது.

குறித்தபடகில் இருந்த 7 மீனவர்களும் கடலில் மூழ்கிய நிலையில், சக மீனவர்கள் அவர்களை மீட்டு கரை சேர்த்தனர் - என்றனர்.

இதேவேளை , இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும், தமிழக மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துமாறு வடக்கு மீனவர் சங்கங்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை விடுத்து வருவதுடன், போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

காரைநகரில் நாளை வெள்ளிக்கிழமை தமிழக மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தக் கோரி மீனவர் சங்கங்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளன.

## ரஞ்சனுக்குப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழியாக நேற்று தொடர்புகொண்ட சஜித், மனித நேயத்தின் அடிப்படையில் இந்த முடிவை எடுக்குமாறும் கோரியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்ற சஜித், ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்து சுகநலம் விசாரித்துள்ளார். ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான பதில் கிட்டும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதுமட்டுமல்ல ரஞ்சனின் விடுதலைக்காக சர்வதேசம் செல்லக் கூட தயாராகவே இருக்கின்றோம் எனவும் சஜித் அறிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் சுதந்திர தினத்தில் ரஞ்சன் விடுவிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கோட்டாவால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இஸ்லாமிய சமூகத்தை இவர்கள் இப்போது துன்புறுத்துகின்றனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு இன்னமும் பதில் கிடைவில்லை.

நாட்டில் வாழ முடியாது என்று இங்குள்ள இளைஞர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச்ச செல்கின்றனர். இளைஞர்கள் இங்கு இல்லை என்றால் எதிர்காலத்தில் இந்த நாட்டைப் பாதுகாப்பது யார்?

வாழும் மக்களிடம் பணம் இல்லை, நாட்டில் டொலர் இல்லை. கொரோனாவைக் காரணம் காட்ட வேண்டாம். உலக நாடுகளும் கொரோனாத் தொற்றுக்கு இலக்கியாகியுள்ளன. ஆனால், அங்குள்ள மக்கள் வரிசையில் நிற்கவில்லை - என்றார்.

## நான்கு விபத்துக்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெண்ணொருவர் மீது மோதியதில் பாதசாரி பெண் மரணமடைந்தார்.

வரக்காமுர, உக்குவெலபிரதேசத்தை சேர்ந்த 77 வயது பெண்ணே இவ்வாறு மரணமடைந்தார். வானின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அநுராதபுரம் மரதன்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரதன்கடவல ஹபரண வீதியில் பஸ்ஸொன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மரணமடைந்தார்.

அமுனிச்சிய, முரியாகடவல பிரதேசத்தை சேர்ந்த 27 வயது நபரே மரணமடைந்தார். பஸ்ஸின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பதுளை ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரவளை வீதி, உடுவர பிரதேசத்தில், பண்டாரவளையிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிளொன்று வீதியில் சென்ற நாயின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். கேபில்ல, பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயது நபரே உயிரிழந்தார். பிரேத பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. ஹாலிஎல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, மஹவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிக்வரெட்டிய சியமலங்கமுவ வீதியில் மோட்டார் சைக்கிளொன்று பாதசாரி பெண்ணொருவர் மீது மோதியதில் பெண் மரணமடைந்தார். கந்தவெத்த, இபலோகம பிரதேசத்தை சேர்ந்த 70 வயது பெண்ணே மரணமடைந்தார்.

விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.




வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

செம்மண் 78 ஆவது இதழ்

வெளிவந்துவிட்டது வாசித்துவிட்டீர்களா?

- ஜல்லிக்கட்டு என்கிற அன்பு கலந்த வீரம்
- வானூர்தியின் சக்கரம் தண்டவாளத்தில் தேயுமானளவுக்குத் தாழப் பறந்தேன்
- அச்சம் தரும் தமிழர் பெருக்கம்
- கோவா வறை
- மனம் தொட்ட சினிமா
- குட்டி போடும் குட்டி ரோபோ...!



மேலும் பல சுவையான அம்சங்களுடன்
உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## மைத்திரியே சூத்திரதாரி!

அரசியல்வாதிகள் பல சமயங்களில் தம்மை விடுத்து பிறரை நோவதன் மூலம் பொறுப்புகளில் இருந்து தப்ப முயல்கின்றனர்.

தென்னிலங்கை அரசியலில் இப்போதெல்லாம் பரபரப்பாகப் பேசப்படும் முன்னாள் ஜனாதிபதியும் சுந்திரக் கட்சித் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவின் இப்போதைய உரைகளும் அப்படித்தான் அமைகின்றன.

முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் சுதந்திரக்கட்சித் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதனை இப்போது நேரடியாகவே சுட்டிக் காட்டுகின்றார்.

நாட்டின் தற்போதைய நிலைமை பெரிதும் கவலையளிப்பதாகக் கூறியுள்ள சந்திரிகா குமாரதுங்க அதனை எண்ணி அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

மைத்திரிபால சிறிசேனவும், மஹிந்த ராஜபக்ஷவுமே சுதந்திரக்கட்சியின் அழிவுக்குப் பொறுப்புக் கூற வேண்டும். பொதுஜன பெரமுனவுடன் சேரவே வேண்டாம் எனத் திரும்பத் திரும்பக் கூறினேன். அதைக் கேட்காத மைத்திரி என்னைக் கட்சியில் இருந்தே நீக்கித் தொகுதி அமைப்பாளர் பதவியையும் பறித்தார். இப்போது மொட்டுக் கட்சிக் கூட்டை விட்டு வெளியேறப் போவதாகக் கூறினார். இதைத்தானே நான் இரண்டு ஆண்டுகளாகத் திரும்பத் திரும்பக் கூறி வருகிறேன் – என்று சுட்டிக் காட்டுகின்றார் சந்திரிகா.

நாடு இந்த இக்கட்டான நிலையைச் சந்தித்தமைக்கு முற்றிலும் பொறுப்பெடுக்க வேண்டியவர் மைத்திரிபால சிறிசேனதான்.

ஏற்கனவே 2006 – 2015 காலப்பகுதியில் ராஜபக்ஷக்களின் ஏதேச்சதிகார ஆட்சியில் மோசமான இருண்டயுகக் கொடூரங்களை மக்கள் சந்தித்தனர்.

அதிலிருந்து வெளிப்பட்டு, நல்லாட்சி அரசு ஒன்றை அமைத்து, நாட்டைத் திருத்திப் புதிதாக்குவதற்குக் கிடைத்த மிக அருமையான வாய்ப்பைத் தனது சின்னத்தனத்தினால் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி, சட்டியில் இருந்த மக்களை நேரடியாக அடுப்பில் வீழ்த்தும் கேவலமான கைங்கரியத்தை முன்னின்று ஒப்பேற்றிய நேரடி சூத்திரதாரி இந்த மைத்திரிபால சிறிசேனதான்.

2014 இறுதி வரை சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளராக இருந்தவர்தான் மைத்திரிபால சிறிசேன. முதல்நாள் இரவு வரை கட்சியின் தலைவராகவும், ஜனாதிபதியாகவும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்சி வேட்பாளராகவும் இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு விசுவாசமுள்ளவர் போல இருந்தவர். இரவு சேர்ந்து அப்பம் சாப்பிட்டு விட்டு அடுத்தநாள் காலையில் எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக – மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான வேட்பாளராக – சுதந்திரக் கட்சிக்கு மாறான போட்டி வேட்பாளராக – தன்னை அறிவித்துக் கொண்டார்.

ராஜபக்ஷக்களின் இருண்ட யுக ஆட்சிப் பிடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக மக்கள் அவருக்கு வாக்களித்தனர். 2015 ஜனாதிபதித் தேர்தலில் வென்ற அவர் என்ன செய்தார்?

சு.க.வேட்பாளரை எதிர்த்து, பொது அணி வேட்பாளராகப் போட்டியிட்டு வென்ற அவர், அந்தப் பதவியை வைத்து சு.க. தலைமையைப் பிடுங்கினார். பறித்த கட்சித் தலைமையையாவது ஒழுங்காகக் கவனித்தாரா என்றால் இல்லை. சு.கவிலிருந்து கொண்டே ராஜபக்ஷக்கள் புதுக் கட்சியை உருவாக்கி, மீளெழுச்சி கொள்வதற்கு எல்லா வகையிலும் ஒத்துழைத்து, ஊக்குவித்து சு.கவுக்கும் நாட்டுக்கும் முழு நாசம் பண்ணினார் அவர்.

பதவியில் தாம் பண்ணிய தில்லுமுல்லுகளினால் சட்டத்தின் முன் சிக்காமல் இருக்க ராஜபக்ஷக்களுக்கு சாமரம் வீசினார். இப்போது மீண்டும் ராஜபக்ஷக்களுக்கு எதிராகத் தத்துவம் பிளக்கின்றார். நாட்டின் இன்றைய அரசியல் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் சூத்திரதாரியே மைத்திரிபால சிறிசேனாதான்.

## விவசாய அமைச்சர் மஹிந்தானந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்து வருகின்றது என அறிய முடிகின்றது.

இது தொடர்பான ஆரம்பக்கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன எனவும், பங்காளிக் கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தப்பட்டு வருகின்றது எனவும் தெரிய வருகின்றது.

விவசாயத்துறை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைப்பது தொடர்பில் இதற்கு முன்னரும் ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்திருந்தாலும், நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இடைநிறுத்தப்பட்டதால் அது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படவில்லை.

முறையற்ற உர முகாமைத்துவத்தால் விவசாயத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, முறையற்ற கொடுக்கல், வாங்கல்கள் காரணமாக சீனாவுடன் ஏற்பட்டுள்ள இராஜதந்திர நெருக்கடி, திரவ உரம் இறக்குமதியில் இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படும் மோசடி உட்பட மேலும் பல விடயங்களை மையப்படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது குறித்து ஆராயப்படுகின்றது.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தால் அது அரசுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும் எனவும், அதன்மூலம் அரசு பலமடையும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால், விவசாயத்துறை அமைச்சரை விமர்சித்து வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெற முடியும். அவ்வாறு இல்லாவிட்டால், அவர்கள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தால்கூட அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆட்டம் காணும் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாரத்துக்குள் இறுதி முடிவொன்று எடுக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, பொருள்கள் விலையேற்றம் உட்பட மேலும் பல விடயங்களை மையப்படுத்தி ஒட்டுமொத்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தால், அதன்மூலமும் அரசு பலமடையும் என்பதால், விவசாயத்துறை அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவருவதே சிறப்புஎனஆலோசனைவழங்கப்பட்டுள்ளது.

## மில்கோ நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்?



மில்கோ நிறுவனத்தின் தற்போதைய தலைவர் லசந்த விக்கிரமசிங்க, அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என பல ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.


எவ்வாறாயினும், நேற்று புதன்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த மில்கோவின் தற்போதைய தலைவர் லசந்த விக்கிரமசிங்க, புதிய தலைவர் நியமனம் தொடர்பில் தனக்கும் ஊடகங்கள் ஊடாகவே தெரியவந்ததாகக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சரை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அது பலனில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## துறைமுக அதிகார சபைக்கு புதிய தலைவர் நியமனம்

துறைமுக அதிகார சபையின் புதிய தலைவராக வைத்தியர் பிரசாந்த ஜயமான்ன நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



## இலங்கைக்கு 4 மேம்பாலங்கள்

எமது நாட்டில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஹங்கேரியாவின் எக்ஸிம் வங்கியின் மூலம் சலுகைக் கடன் வசதியளிப்பதற்கு ஹங்கேரி அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் நிதி ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அதன்கீழ் கொஹுவல மற்றும் கெட்டம்பே மேம்பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த கருத்திட்டங்களுக்கு அப்பால் தேசிய வீதி வலையமைப்பில் முத்தெட்டுகல ரயில் கடவை மற்றும் ஹிரிபிட்டிய சந்தி, பஸ்யால சந்தி, நீர்கொழும்பு மாரிஸ்டெலா சந்தி மற்றும் தலவத்துகொட சந்தி போன்ற இடங்களில் காணப்படும் போக்குவரத்து நெரிசல்களுக்குத் தீர்வு வழங்குவதற்காக குறித்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த இடங்களில் மேம்பாலங்கள் 4 ஐ அமைப்பதற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# கொரோனாவை எதிர்கொள்ள கூட்டு முயற்சி தான் ஒரே வழி

## சீன அதிபர் அறிவுரை

கொரோனா பாதிப்பை எதிர்த்துப் போராட கூட்டு முயற்சிதான் ஒரே வழி; மற்றவாகள் மீது குற்றம்சுமத்தி பனிப்போா மனநிலையுடன்செயல்படுவது கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளை தாமதப்படுத்துவதாகவே அமையும்' என்று உலகப் பொருளாதார கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில் பேசிய சீன அதிபர் ஷி ஜின்பிங் மறைமுகமாக அமெரிக்காவை சுட்டிக்காட்டிப் பேசினார். மாநாட்டில் காணொலி வழியில் பங்கேற்ற அவர்மேலும்பேசியவை வருமாறு:

புயலை துணிச்சலுடன் எதிர்கொள்ளமிகப் பெரிய கப்பல் போதுமானது. கொரோனா பாதிப்பு உலகில் நீடித்து இருக்கும் என்பதை நிரூபித்திருக்கிறது. இது உலக நாடுகளின் சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா பாதிப்பின் காரணமாக சில வளாந்து வரும் நாடுகள், மீண்டும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. சில வளாந்த நாடுகளும் கடுமையான சூழலை எதிர்கொண்டு வருகின்றன.

இத்தகையச் சூழலில், இந்தபாதிப்புக்குமற்றவாகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பது, நமது நோக்கத்தை திசைத்திருப்பவதாக அமைந்துவிடும். எனவே, கொரோனாவை எதிர்த்துப் போராட உலக நாடுகளின் ஒருங்கிணைந்த கூட்டுமுயற்சி அவசியம் என்பதோடு, தடைகளை விலக்கி அனைவருக்குமான திறந்த உலகப் பொருளாதாரத்தை உருவாக்கவேண்டும்.

மிகப் பெரிய பொருளாதார நாடுகள் மற்றவாகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பது அல்லது அவாகளின் நிதிக் கொள்கைகளில் மாற்றங்களை மேற்கொள்வது என்பது, மிக மோசமான எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, பெரிய பொருளாதார நாடுகள் பனிப்போா மனநிலையைக் கைவிட்டு, உலகளாவிய பொருளாதார மற்றும் நிதி ஸ்திரத்தன்மைக்கு சவால்களை முன்வைக்கவேண்டும். குறிப்பாக, வளர்ந்து வரும் நாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் பொறுப்பு வளர்ந்த நாடுகளுக்கு உள்ளது.

கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் உள்ள இடைவெளியைப் போக்கும் வகையில், உலக நாடுகளுக்கு தடுப்பூசிகள் சமமாக பகிர்ந்தளிக்கப்படுவதையும் உறுதிப்படுத்தவேண்டும்.

மேலும், எண்ம (டிஜிற்றல்) பொருளாதாரத்துக்கு சர்வதேச விதிகளை உருவாக்க வேண்டும் என்பதோடு, உலக நாடுகளிடையே மிகப் பெரிய அளவில் தகவல் பரிமாற்றமும் அவசியம் என்று ஷி ஜின்பிங் கூறினார்.

## இசையை வெறுக்கும் தாலிபான்கள்!

# இசைக்கருவியை எரிக்கும் காணொலி வெளியீடு



தாலிபான்கள், இசையமைப்பாளர் ஒருவரின் இசைக் கருவிகளை நடு வீதியில் தீயிட்ட காணொலி தற்போது இணையத்தில் வெளியாகியுள்ளது. தலீபான்கள் ஆட்சி நடைபெற்று வரும் ஆப்கானிஸ்தானில் கடுமையான சட்டங்கள் நடை முறையில் உள்ளன.

பெண்களுக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட் டுள்ளன. பல்வேறு சமூக, கலாச்சார கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இசையும் பல்வேறு இடங்களில் தடை செய்யப்பட்டுள்ளது.வாகனங்களில் செல்வோர் இசையை கேட்க முடியாது. திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் இசை வாத்தியங்களை ஒலிக்கவும் தலிபான்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே உள்ளூர் இசையமைப்பாளர் ஒருவரின் இசைக்கருவிகளை வீதியில் தீயிட்ட காணொலி தற்போது இணையத்தில் வெளியாகியுள்ளது.தமது இசைக் கருவி எரிக்கப்படுவதைக் கண்டு அந்த இசையமைப்பாளர் அழுகிறார்.ஆனால் தலிபான்கள் அவரின் நிலையை கண்டு சிரிக்கின்றனர்.

# பதவிக்கு அச்சுறுத்தல் கட்டுப்பாடுகளை தளர்த்த பிரதமர் ஜோன்சன் திட்டம்

பிரித்தானியாவில் கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து அறிவிப்பை பிரதமர் பொரிஸ் ஜோன்சன் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு முடக்க கட்டுப்பாடுகளின்போது அவரது இல்லத்தில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வு குறித்து தற்போது சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இதன் காரணமாக 20 கன்சர்வேடிவ் உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினர்களை சமாதானப்படுத்தும் முயற்சியாக அவர் இந்த அறிவிப்பை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த மாதம் ஒமிக்ரோன் மாறுபாட்டின் அதிகரிப்பு காரணமாக விதிக்கப்பட்ட தற்போதைய கட்டுப்பாடுகளை அமைச்சரவை மீளாய்வு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கிளர்ச்சியாளர்களை குறிவைத்து சவுதி தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதல்!

ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகர் அபுதாபி விமான நிலையம், அபுதாபியின் முாபா நகரில் உள்ள அண்டோக் எண்ணெய் நிறுவனத்தை குறிவைத்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நேற்று ட்ரோன் தாக்குதல் நடத்திய நிலையில் அதற்குப் பதிலடியாக ஹவுத்தி கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து சவூதி தலைமையிலான கூட்டுப்படைகள் விமானத் தாக்குதலை நடத்தியுள்ளன. ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகர் அபுதாபி விமான நிலையம், அபுதாபியின் முபா நகரில் உள்ள அண்டோக் எண்ணெய் நிறுவனத்தை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று ட்ரோன் தாக்குதல் நடத்தினர்.

இதில், எண்ணெய் நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்த பெட்றோல் தாங்கிகள் வெடித்து சிதறி எரிந்தன. இந்தத் தாக்குதலில் எண்ணெய் நிறுவனத்தில் பணியாற்றி வந்த 2 இந்தியர்கள் மற்றும் ஒரு பாகிஸ்தானியர் என 3 பேர் உயிரிழந்தனர். எனினும் விமான நிலையத்தில் நடைபெற்ற தாக்குதலில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

இந்நிலையில், அபுதாபியில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் யேமன் தலைநகர் சனாவில் உள்ள ஈரான் ஆதரவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து சவுதி தலைமையிலான கூட்டுப்படைகள் வான் வெளி தாக்குதல் நடத்தின.

அபுதாபியில் தாக்குதல் நடந்த சில மணி நேரங்களில் இந்த பதில் தாக்குதல் நடத்தப்பட்டது. முன்னதாக, யேமனில் இருந்து சவுதி அரேபியாவுக்கு சென்ற ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சொந்தமான சரக்கு கப்பலை ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கடத்தி சென்றனர். அந்த சரக்கு கப்பலில் 7 இந்தியர்கள் உட்பட 11 மாலுமிகளை ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் பிணைக் கைதிகளாக பிடித்து வைத்துள்ளனர்.

ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் பிடிக்கப்பட்டுள்ள இந்தியர்களை மீட்க தீவிர முயற்சி மேற்கொண்டு வருவதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

யேமன் நாட்டில் ஜனாதிபதி மன்சூர் ஹாதி தலைமையிலான அரச படைகளுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு முதல் சண்டை நடைபெற்று வருகிறது. இந்த உள்நாட்டுப் போரில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை ஈரான் ஆதரிக்கிறது. மேலும் யேமன் அரசுக்கு சவூதி தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளிக்கின்றன. இந்த கூட்டுப் படையில் ஐக்கிய அரபு அமீரகமும் உள்ளடக்கியுள்ளது. இதனால், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும், சவூதி தலைமையிலான கூட்டுப் படைகளுக்கும் இடையே மோதல் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் இருந்து வந்த பொதியில் ஒமேகா–3 ; சீனா குற்றச்சாட்டு!

கனடாவில் இருந்து ஒரு பொதி மூலம் சீனாவில் ஒமேகா–3 பரவுவதாக சுகாதார அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கனடாவிலிருந்துவந்தபொதியின்மேற்பரப்புமற்றும்உள்ளடக்கங்கள் மற்றும் ஆவணங்களில் ஒமேகா–3கள் இருப்பதாக அதிகாரிகள் விளக்கினர்.

கடந்த ஜனவரி 11ஆம் திகதி கனடாவில் இருந்து சீனாவில் பொதியை வாங்கிய நபருக்கு கடந்த 15ஆம் திகதி ஒமேகா இருப்பது கண்டறியப்பட்டதாகவும், கடந்த ஜனவரி 7ஆம் திகதி கனடாவில் இருந்து இந்த பொதி அனுப்பப்பட்டு ஹொங்கொங், அமெரிக்கா, சீனா வழியாக பீஜிங் வந்ததாகவும் கூறப்படுகிறது.

டிசம்பர் 2021ஆம் ஆண்டு வட அமெரிக்கா மற்றும் சிங்கப்பூரில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸைப் போலவே, ஒமேகா –3 பாதிக்கப்பட்ட நபரின் கொரோனா தொற்று சீனாவிலும் பதிவாகியுள்ளது.



# ஆசிரியர் கலாசாலையில் 10 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயின்று வரும் இரண்டாம் ஆண்டு ஆசிரிய மாணவர்கள் 10 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

202 பேருக்கு, நேற்று முன் தினம் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.பி.யுனைட் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக 2020ஆம் ஆண்டு விடுமுறையில் சென்ற ஆசிரிய மாணவர்கள் தொடர்ந்து விடுமுறையில் சூம் தொழில்நுட்பம் மூலம் கல்வி கற்று வந்தனர்.

இந்நிலையில், சுமார் ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் ஆசிரியர் கலாசாலை நேற்று முன்தினம் திறக்கப்பட்டதையடுத்து, அங்கு கல்வி பயின்றுவரும் 202 இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேருக்கும் அம்பாறை மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 5 பேர் உட்பட 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

# திருகோணமலை மாவட்டத்தில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா

திருகோணமலை மாவட்டத்தில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர்களின் வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனடிப்படையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்றுக் காலை 8 மணி முதல் மாலை 5 மணி மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனை மூலம் 18 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வயதுடைய இரட்டைக் குழந்தைகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தம்பலகாமம்,கன்னியா, நிலாவெளி மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் போன்ற இடங்களில் தொற்றாளர்கள் மேலும் அதிகரித்து வருகின்றனர் எனவும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமை நேர வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

பொதுமக்கள் வைத்தியசாலைக்கு வரும் போதும் பாதுகாப்பாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி முகக் கவசங்கள் அணிந்து வருகை தருமாறும் மக்கள் அதிகம் நடமாடும் இடங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# காரைதீவு பிரதேசசபை தவிசாளருக்கு கொவிட்

காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நோய் அறிகுறிகள் தென்பட்டதைத் தொடர்ந்து சிரேஷ்ட பொதுச் சுகாதாரபரிசோதகர் சா.வேல்முருகு தலைமையிலான குழுவினர் தவிசாளரது வீட்டிற்கு விஜயம்செய்து அன்ரிஜன் சோதனையை மேற்கொண்டனர்.

அதன்படி தவிசாளர் அவரது மனைவி மற்றும் அவரது மகள் ஆகியோருக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அதனையடுத்து அவர் குடும்பத்தோடு வீட்டில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளார்.

அவரும் அவரது மனைவியும் ஏற்கனவே இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு

திறன் விருத்தி,பால் நிலை சமத்துவம் தொடர்பிலான தலைமைத்துவப் பயிற்சி செயலமர்வொன்று றெக்டோ அமைப்பின் ஏற்பாட்டில் கந்தளாய் லேக் புரன்ட் விடுதியில் நேற்று இடம் பெற்றது இந்த முழுநாள் செயமர்வானது தம்பலகாமம் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களாகப் பணிபுரிவோர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சமுதாயத்துடன் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுத்து மக்களுக்கான அரச சேவையை வழங்குவதும் அதன் பங்களிப்பு தொடர்பிலும் இதன் போது விளக்கமளிக்கப்பட்டதுடன் குழு செயற்பாடு மூலமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பால் நிலை சமத்துவம் மற்றும் துஷ்பிரயோகங்கள் ஏற்படும் போது சட்ட ஆலோசனை அது தொடர்பிலான முறைப்பாடுகளை அறிவித்தல் அரச நிறுவன சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலும் விரிவுரைகளாக இச் செயலமர் வின் போது வளவாளர்களால் எடுத்துரைக்கப்பட்டது. இச் செயலமர்வில் பங்குபற்றியவர் களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# திருடனுக்கு பயந்து பெறுமதி வாய்ந்த நகைகளைத் தொலைத்த பெண்

வீட்டிலிருந்து வெளியே சென்ற பெண்ணொருவர் அவர் எடுத்துச் சென்ற நகைகளைத் தொலைத்துள்ள சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கே.கே.வீதியிலுள்ள பெண்ணொருவரே அவரது எட்டு பவுண்களுக்கு மேற்பட்ட நகைகளை தொலைத்துள்ளார்.

குறித்த பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதால், திருடனுக்கு பயந்த அந்த பெண்மணி வேலையொன்றின் காரணமாக வீட்டிலிருந்து நகைகளுடன் வெளிச் சென்றபோதே நகைகளைத் தொலைத்துள்ளார்.

இவ்வாறு தொலைந்து போயுள்ள நகைகளைத் தேடும் நடவடிக்கையில் பெண்ணின் குடும்பத்தார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்த வேண்டும்

## கிழக்கு ஆளுநர் அநுராதா ஆலோசனை

நாட்டில் தற்போது நிலவும் டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்த வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜஹம்பத் தெரிவித்துள்ளார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் இறக்குமதி செய் யப்படும் அனைத்து அத்தியாவசியமற்ற பொருள்களும் நிறுத்தப்படுகின்றன எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கந்தளாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் நிர்மா ணிக்கப்பட்ட புதிய விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் அநு ராதா ஜஹம்பத் தெரிவித்தவை வருமாறு – நாங்கள் இன்று டொலர் நெருக்கடியைப் பற்றிப்பேசுகிறோம். 1977 இல் இருந்து தினமும் கடன் வாங்கி வருகிறோம். ஒரு நாடாக நாங்கள் அதைத் தொடர்ந்து செய்தோம். இப்போது இந்த டொலர் நெருக்கடியால் அத்தியாவசியப் பொருள்களை மட்டுமே இறக்குமதி செய்கிறோம்.

தேவையற்ற பொருள்களை நாங்கள் இறக்குமதி செய்யமாட்டோம், எனவே, எங்கள் உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்த வேண்டும். நான் அதை ஒரு வரமாகப் பார்க்கிறேன். கொவிட் தொற்று நோய் தற்போதைய அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளைப் பாதித்துள்ளது.

இது உலகின் அனைத்து நாடுகளையும் பாதித்தது. ஆனால், நம் நாட்டில் மட்டும் பல போராட்டங்கள் நடந்தன. இந்தத் தொற்றுநோய்க்கு அர சாங்கம் காரணமல்ல. மாறாக அரசாங்கத்தையே விமர் சிக்கிறார்கள். மேலும், கொவிட் தொற்று நோயால் நாடு சிதைந்த போது, கூட்டுறவுத் துறை மதிப்புமிக்க சேவையைச் செய்தது. கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்க மொபைல் வாகனங்களைப் பயன்படுத்தியது.

மேலும் நமது மக்களின் புதிய உள்ளூர் உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளித்து அவர் களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, விவசாய அமைச்சின் செயலா ளர் கலாமதி பத்மராஜா, மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# ஆரியகுளம் பகுதியின் பாதுகாப்பை உறுதிசெய்ய நடவடிக்கை வேண்டும்

## ஈ.பி.டி.பி வலியுறுத்து

வடக்கு – கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களின் உயர் நீதிமன்ற வழக்கு ஆவணங்கள் நீண்ட காலமாக மொழிப் பிரச்சினை காரணமாக நிலுவையிலுள்ளமையால் அவற்றைக் கால தாமதமின்றி விரைவுப்படுத்தித் தீர்ப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இலங்கையின் பிரதம நீதியரசரிடம் வலியுறுத்துவதற்கு மகஜர் சமர்பிக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாநகரசபை உறுப்பினரும், சிரேஷ்ட மனித உரிமை சட்டத்தரணியுமான றெமீடியஸ் முன்வைத்த யோசனைக்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வும், புதிய ஆண்டின் முதலாவது அமர்வும் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இதன்போதே குறித்த முன்மொழிவுக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த உறப்பினர் றெமீடியஸ் கூறியவை வருமாறு –

வட மாகாணத்துக்கான விஜய மொற்றை முன்னெடுத்து எதிர் வரும் 30 ஆம் திகதி யாழ். மாவட்டத்திற்கு பிரதமநீதியரசர் வருகைதரவுள்ள நிலையில், வடக்கு – கிழக்கை சேர்ந்த மேன்முறையீட்டுக்காக சமர்ப்பித்தும் இது வரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாது தேங்கியுள்ள வழக்குகளை விரைவுபடுத்துமாறும் கால தாமதத்தை தவிர்த்து நீதிக்காகக் காத்திருக்கும் தரப்பினருக்கு விரைவான தீர்ப்பை வழங்க வேண்டும் என்றும் எமது சபையின் ஊடாக ஒரு முன்மொழிவை நிறைவேற்றி அதனைக் குறித்த ஆவணங்களுடன் அவரிடம் சமர்ப்பித்து வலியுறுத்துவது தொடர்பில் றெமீடியஸ் அதனை ஒரு முன்மொழிவாக சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் குறித்த யோசனையை சபை ஒருமனதாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியதுடன் குறித்த ஆவணங்களை பிரதம நீதியரசரிடம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகத் தெரிவித்திருந்தது.

இதேவேளை, ஆளுநரின் அதிகாரங்கள் தொடர்பில் கடிதம் ஒன்று தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அந்தக் கடிதத்தில் தேர்தல் ஆனைக்குளு உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கம் தொடர்பில் வரையறை செய் துள்ளதுடன், அவ்வாறு ஒழுக்கம் மற்றும் சட்ட வரையறையை மீறி செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவோ அல்லது அவரை நீக்கவோ அதிகாரம் ஆளுநருக்கு உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக முதல்வர் மணிவண்ணனால் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே வாகன பகுதியில் ஒரே ஓர் அதிகாரியே இருப்பதால் வாக னங்களில் ஏற்படும் சாதாரண பழுதுக ளைக் கூட உடனடியாகச் செய்ய முடியாதிருப்பதால் அவரது அதிகாரத்தை மேலும் பலருக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டது. இதனிடையே யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தக கண்காட்சி தொடர்பிலும் சபையில் விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக இறுதியாக நடைபெற்ற குறித்த கண்காட்சிக்காக மாநகரசபைக்கு செலுத்த வேண்டிய நிதியான 30 லட்சம் ரூபா இதுவரை செலுத்தப்படாதிருந்ததாகவும் அதில் 10 லட்சம் ரூபா தற்போது குறித்த தரப்பினரால் செலுத்தப்பட்டுள்ளதாகவும் மிகுதி பணம் தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் முதல்வர் தெரிவித்திருந்தார்.

இதேநேரம் இம்முறை இறுக்கமாக வர்த்தக கண்காட்சியில் ஸ்ரோல் ஒன்றின் அறவீடு குறைப்பு மாநகரசபை இறுக்கமாக இருக்க வேண்டும் என்றும் நுழைவுச் சீட்டு உள்ளிட்ட விடயங்களில் மோசடி இடம்பெறாத வகையில் கண்காணிப்பு இறுக்கமாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டதுடன் அவ்வாறு மோசடிகள் காணப்பட்டால் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 3 லட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் ஆரியகுளம் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் அப்பகுதியை புனரமைக்கும் போது இருந்துவந்த நிலை தற்போது மாறி பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தும் சம்பவங்கள் நடந்தேறி வருகின்றமையால் அப்பகுதியில் சி.சி. ரிவி பொருத்தல் அவசியம் என்றும் அதன் பாதுகாப்பையும் புனிதத் தன்மையையும் உறுதி செய்ய சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஈ.பி.டி.பி வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா ஏ.ரி.எம்.இல் பணம் திருடிய பெண்!




வவுனியா வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரத்தில் வேறொருவரின் பணத்தை திருடிய பெண் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் நடந்தவை வருமாறு:–

புதன் பிற்பகல் வவுனியா வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரத்துக்குச் சென்ற பெண் ஒருவர் 17 ஆயிரம் ரூபா பணத்தை எடுக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது இயந்திரத்தின் அறிவுறுத்தலை சரியாக அவதானிக்காத அவர் தனது அட்டையை மாத்திரம் மீளவும் பெற்றுக்கொண்டதுடன், பணத்தை எடுக்காமல் சென்றுள்ளார். இதனை அருகிலிருந்து அவதானித்து கொண்டிருந்த மற்றொரு பெண் இயந்திரத்திலிருந்து வெளியில் வந்த 17 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்து தனது பையினுள் மறைத்து வைத்துள்ளார்.

எனினும் குறித்த பணம் திருடப்பட்டுள்ள விடயம் அங்கிருந்தவர்களின் மூலம் பணத்தின் உரிமையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அத்துடன் பணத்தைத் திருடிய பெண்ணை எச்சரித்த நிலையில் அவர் தானே அதனைத் திருடினார் என ஒப்புக்கொண்டதுடன், பணத்தை உரிமையாளரிடம் மீளவும் வழங்கியிருந்தார்.

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேக நபர்கள் 63 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாகக் காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, உட்பட சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் 63 பேரையும் 02 ஆம் மாதம் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் காணொளி மூலமாக நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டார்.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்குப் பயிற்சிக்காகச் சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் காத்தான்குடியை சேர்ந்த 65 பேரைக் கைது செய்தனர்.


அதேவேளை சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்தனர். இரு வெவ்வேறு வழக்குகளைக் கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 5 பேர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 64 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வெவ்வேறு இரு வழக்கு இலக்கங்களைக் கொண்ட 64 பேரும் நாட்டிலுள்ள பொலன்நறுவை, அநுதாரபுரம், கேகாலை, திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அழிவுக்கு மைத்திரிபாலவும் மஹிந்தவுமே பொறுப்பு!

## சாடுகின்றார் சந்திரிக்கா



முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேனவும், மஹிந்த ராஜபக்ஷவுமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அழிவிற்குப் பொறுப்பு சொல்ல வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டின் தற்போதைய நிலை பெரும் கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடுமையான போர் இடம்பெற்ற காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியதாகவும், தற்போதைய நிலையை எண்ணி அழுவதா சிரிப்பதா என்பது புரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் இருப்பவர்கள் என்ன கூறுகின்றார்கள் என்பது மற்றவர்களுக்குத் தெரிவதில்லை எனவும், காலை ஒன்றையும் மாலையில் ஒன்றையும் கூறுகின்றார்கள் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். மொட்டு கட்சியுடன் இணைந்து கொள்ள வேண்டாம் என தாம் கோரியதாகவும் அதனை கட்சியின் தலைவர் மைத்திரி கண்டுகொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தம்மை கட்சியிலிருந்து நீக்கி, தொகுதி அமைப்பாளர் பதவியைப் பறித்த மைத்திரி இன்று மொட்டு கட்சியை விட்டு வெளியேறுவதாகக் கூறுகின்றார் எனவும் இதனையே தாம் இரண்டு ஆண்டுகளாக கூறி வருகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஊழியர் இழப்பீட்டு சட்டம் திருத்தம்

*கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது திடீர் விபத்துக்களால் பாதிக்கபடும் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் அனுகூலங்கள் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இற்றைப்படுத்துவதற்காக 1934 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச்சட்டம் (139 ஆம் அத்தியாயம்) திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

*அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளதுடன், குறித்த சட்ட மூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.01.2022இல் வெளியிடப்பெற்றது.